★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563[illegible]

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 31௳ புதன் (13—6—56) ★ ★ வெளியூர்: ஆனி 1௳ வியாழன் (14—6—56) [இதழ் 309

'ஸ்டாலின் மோட்டார் தொழிற்சாலை' பெயர் மாற்றம்

'மாஸ்கோ மோட்டார் தொழிற்சாலை'யான விந்தை!

யூகோ நாட்டுத் தலைவர் மார்ஷல் டிட்டோ, அண்மையில் மாஸ்கோவில் உள்ள ஸ்டாலின் மோட்டார் தொழிற்சாலையைப் பார்வையிடச் சென்றிருந்த போது, சில காலத்திற்கு முன்னால் இப்படியும் நடைபெறும் என்று சிந்தித்துப் பார்க்கக்கூட இயலாத சம்பவங்கள் நடைபெற்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

1956-57-ல் அகதிகளின் தண்டச் செலவு!

பணமாக இருபது கோடியாம்!

சொத்தாக இருபத்திநான்கு கோடியாம்!

கடனுக்கு ஈடுசெய்ய பன்னிரண்டு கோடியாம்!

இந்தியப் பேரரசின் தாராளமே தாராளம்!

சிம்லா, ஜூன் 11—

"அகதிகளின் புனர்வாழ்விற்காக 1956—57-ம் ஆண்டில் மட்டும் ரூ. 56 கோடி செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்தொகையில் பணமாக 20 கோடி ரூபாயும், சொத்தாக 24-கோடி ரூபாயும் அகதிகள் பட்டுள்ள கடன்களை ஈடு செய்வதற்காக ரூ 12 கோடியும் செலவிடப்படும் என வரையறுக்கப்பட்டிருக்கிறது."

இத்தகவலை அகதிகள் புனர்வாழ்வு மந்திரியான மேகர்சந்த் கன்னா, அறிவித்துள்ளார்.

அகதிகளுக்கு நஷ்டஈடு தருவது பற்றிய நடைமுறைகள் உள் விதிகள், பணம் பெறுவதில் தாமதமளிப்பதாக இருப்பதால், விரைவாகப் பணம் பெறுவதற்கான வகையில், அவைகளைத் திருத்த அரசாங்கம் முன்வந்து இருக்கிறது என்பதையும் அவர் அறிவித்தார்.

நஷ்டஈடு பெறவேண்டியவர்களில் விதவை அகதிகளுக்கு முதற்சலுகைக் காட்டப்பட்டு வருவதாகவும், விதிகளினால் ஏற்படும் தாமதத்தினால், அச்சலுகை தரப்பட்டிருந்தும் எத்தவித பயனும் இல்லாது இருக்கிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்பு இருந்தாலும் கவலையில்லை போலும்!

புதுடில்லி, ஜூன் 12—

'அம்பர் சர்க்கா' உற்பத்திக்காக இந்திய பேரரசினர் ரூ. 70 இலட்சம் அனுமதித்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

'அந்தக் காலத்துச் சமூக சூழ்நிலை இன்று இல்லை'

'அதற்காகத் தந்துள்ள அற நிதிகளையும் அந்நாள் போக்கில் செலவிடத் தேவையில்லை'

'இன்றுள்ள சமூகத் தேவைக்கேற்ப அந்த நிதிகளைச் செலவிடுவதே சட்ட சம்மதமாகும்'

அறநிலைய சொத்துக்களில் இந்தியப் பேரரசு தலையிட முனைகிறது

புதுடில்லி, ஜூன் 13—

"வேறு ஒரு சமூக சூழ்நிலையில் அளிக்கப்பட்ட அற நிதிகளை, தற்கால சூழ்நிலையின, தேவைக்கொப்ப, புதிய துறைகளில் செலவிட, சட்டப்படி மாற்றம் செய்வது இலகுவாகும்"

இந்தியாவிலுள்ள மத, தர்ம பரிபாலன நிறுவனங்களில், பலநூறு கோடிக் கணக்கில் குவிந்து கிடக்கும் ரூபாய்கள், திட்டக குழு—இந்திய அரசாங்கம் ஆகியவற்றின் கவனத்தை ஈர்த்துள்ளன.

செலவழிக்கப்படாமல் குவிந்து கிடக்கும் பலநூறு கோடிக் கணக்கான ரூபாய்களையும், சமுதாய நலனுக்காகப் பயன்படுத்தலாம் என்றும், அனைத்திந்திய ரீதியில் இது சம்பந்தமான ஒரு சட்டம் உருவாக்கப்பட வேண்டுவது தேவையா, அல்லது விரும்பத்தக்கதா என்பதை விசாரணை செய்து அறிந்து கொள்ளலாம் என்றும் கருதப்படுவதாகத் தெரிகிறது.

இந்த நிதிகள் சம்பந்தமானவற்றை நன்கு அறிந்துகொள்வதற்கு எல்லா மாநிலங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

பம்பாய் மாநிலத்தில் மாத்திரம் உள்ள சுமார் 5,000 மத பரிபாலன நிறுவனங்களில் 91 கோடி ரூபாய் சொத்து இருப்பதாக விசாரணையின் வாயிலாக அறிந்து கொள்ளப்பட்டது. இச்சொத்துக்களினால் ஆண்டு வருமானம் ரூ. 7·7 கோடி என்றும், அவற்றுள் செலவாவது ரூ 3 5 கோடி என்றும் தெரிகிறது.

ஏராளமாகக் குவிந்து கிடக்கும் நிதியைத் தகக முறையில பயன்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாதது என்று உணரப்பட்டது.

இது சம்பந்தமாக மாநில அரசாங்கங்களை ஆலோசனை கேட்ட போது, சில மாநில அரசாங்கங்கள் மாத்திரம் மத பரிபாலன நிறுவனங்களைச் சேர்ந்த நிதிகள் சம்பந்தமாக அகில இந்திய ரீதியில் சட்டம் உருவாக்கப்படவேண்டுமென்று தம் கருத்தை அறிவித்துள்ளன. சில அரசாங்கங்கள், அகில இந்திய ரீதியில் சட்டம் தேவையில்லை என்று கருதுகின்றன! பெரும்பாலான அரசாங்கங்கள் திட்டமான முடிவு கூறவில்லை.

புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்ட மக்களுக்கு நிவாரணம்

ரூ. 60 இலட்சம் வழங்கப்பட்டதாம்!

தஞ்சாவூர், ஜூன் 9—

தஞ்சை மாவட்டத்தில், கடந்த ஆண்டில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சென்ற மே மாதத்தில் மாத்திரம் ரூ. 20,66,135 கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்டு அல்லலுறுகின்றவர்களுக்கு இதுவரையில் ரூ. 60 இலட்சத்திற்குமேல் பல்வேறு வகைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

மீன் பிடிப்போர்களுக்குக் கட்டுமரத்திற்குத் தேவையான மரத்தண்டுகள் வாங்குவதற்கென அரசாங்கம் ரூ 66,000 கொடுப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது; இத்தொகையில் 50 சதவீதம் கடனாகக் கருதப்படும். கடன் தொகையை 6 மாதத்தில் 6 தவணைகளில் வசூலிக்கப்படும். மற்றும், படகுகள் வாங்குவதற்கென ரூ. 17,850 அளிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மற்றும் மீன் வலை பின்னுவதற்கு வேண்டிய நூல் வாங்குவதற்கென 50,000 கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெல் பயிரிடுவோருக்குக் கடனாகக் கொடுப்பதற்கென ரூ. 21 இலட்சமும், கரும்புப் பயிரிடுவோருக்கென ரூ. 1,80,000 கடனாகக் கொடுப்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடன் சட்டத்தின் கீழ் கடன் கொடுப்பதற்கெனவும் ரூ. 12 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில், 1955-ம் ஆண்டில் மொத்தம் சுமார் ரூ. 8 கோடி மதிப்புள்ள மின்சார மீட்டர்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

பாகிஸ்தான் அரசியலில் இராணுவத்தலைவர் தோற்றம்!

காஷ்மீரை மீட்டுத் தருவதாக 'வாக்குறுதி' தருகிறார்?

கராச்சி, ஜுன் 11—

பாகிஸ்தான் இராணுவத்தில் ஏற்கனவே ஜெனரலாக இருந்தவரும், 1947—48-ல் காஷ்மீரில் போராடிய பாக் இராணுவத்தின் கமாண்டராக இருந்தவரும் இராவல்பிண்டி சதிவழக்கில் சம்பந்தப்பட்டவர் என்று சந்தேகிக்கப்பட்டு, அதன் விளைவால் 'இராணுவ உடை'யை அப்புறப்படுத்திவிட்டு இருந்தவருமான அக்பர்கான் என்பவர், இப்போது மீண்டும் அரசியலில் குதிக்க ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

அவர், தாம காஷ்மீரத்தை மீட்டு பாகிஸ்தானுக்குத் தந்துவிட முடியும் என்று கூறுவதாகவும் தெரிகிறது. அவர் இப்போது பாகிஸ்தான் அரசியல்வாதிகளுடன் தாம் அரசியலில் சேருவது குறித்தும், காஷ்மீர் போராட்டம் குறித்தும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதாகத் தெரிகிறது.

ரூ.105 கோடி செலவில் எஃகுத் தொழிற்சாலை

பிரிட்டிஷ்—ஜெர்மன் நிறுவனங்களுடன் ஒப்பந்தம்

புதுடில்லி, ஜுன் 12—

கோவா போரதி என்னுமிடத்தில் ரூ. 105 கோடி செலவில் பிரிட்டிஷ் நிபுணர்கள் உதவியுடன் ஒரு எஃகுத் தொழிற்சாலை நிறுவுவது குறித்து விரிவான ஒப்பந்தம் இன்னும் சில வாரங்களில் ஏற்பட்டுவிடுமென்று தெரிகிறது.

இந்தத் தொழிற்சாலையில் சில பகுதிகளை நிறுவுவதற்கு சில ஜெர்மன் நிறுவனங்கள் முன் வந்திருக்கின்றன. ஆகவே இந்திய அதிகாரிகள் ஜெர்மன் நிறுவனங்களுடனும் ஒப்பந்தம் செய்து கொள்வர்.

எஃகுத் தொழிற்சாலை நிறுவுவது பற்றி ஏற்கனவே பிரிட்டிஷ் கம்பெனியுடன் ஒரு பொதுவான ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆந்திராவில் இந்தி மொழி படிப்பின் இலட்சணம்!

15 சதவிகித 'மார்க்கு'கள் பெறுவதற்கும் மாணவர்கள் அக்கறை காட்டவில்லை!

10 சதவிகிதத்திற்கு சலுகை தந்தும் எதிர்பார்த்த பயனில்லை!

தலைமைக் கல்வி அதிகாரி 'நடவடிக்கை'

ஆந்திர மாநிலத்தில் உள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் மாணவர்களில் ஏராளமான பேர் 1955—56-ல் இந்தித் தேர்வில் வெற்றிக்குரிய மதிப்பெண் (மார்க்குகள்) பெறாததாலேயே மேல் வகுப்புக்கு மாற்றப்படவில்லை என்று ஏராளமான புகார்கள் ஆந்திர மாநில தலைமைக் கல்வி அதிகாரிக்கு வந்துள்ளன.

இப்புகார்களைத் தலைமைக் கல்வி அதிகாரி நன்கு பரிசீலனை செய்து பார்த்தார். பின்னர், இந்தித் தேர்வில் வெற்றிக்குரிய 15 சதவிகித மதிப்பெண்ணைப் பெறாததால் ஏராளமான மாணவர்கள் தோல்வியுற்றிருக்கும் பள்ளிகளில் இந்தியில் வெற்றிக்குரிய மதிப்பெண்ணை 10 சதவிகிதமாகக் குறைத்துக் கொள்ளலாம் என்று தலைமைக் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். இந்த ஆண்டில் மாத்திரம் பிரத்தியேகமாக இவ்வேற்பாடு இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியில் வெற்றிக்குரிய குறைந்த மதிப்பெண் 10 சதவிகிதம் என்று ஆக்கிய பிறகும் தகராறு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால், சம்பந்தப்பட்ட டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு அறிவித்து ஆவன செய்யுமாறு தலைமைக் கல்வி அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அதுவும் அங்கேதான்!

காண்ட்லா, பம்பாய், கல்கத்தா துறைமுகங்களில் 'ராடார்' சாதனங்களை அமைக்க இந்தியச் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்; இதன் மதிப்பு சுமார் 27,000 பவுன்கள்.

பெருந்தன்மை!

பம்பாய், ஜுன் 12—

பம்பாய் அரசாங்க அதிகாரிகளின் [illegible], 'காஷ்மீர் இளவரசி' என்ற இந்திய விமானம் 1955 ஏப்ரலில் தென் சீனக் கடலில் விழுந்து, விபத்துக்குள்ளானதில் உயிர் தப்பியவர்களுக்கும், இறந்தவர் குடும்பத்தினருக்கும் கொடுப்பதற்காக ரூ 82,[illegible] [illegible]

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—6—'56 புதன்

சித்தூர் அய்யங்காரின் சேட்டை!

'நாய்க்குப் பயித்தியம் பிடித்ததாகச் சொல்லு— அதன் பின்னர் அதை அடித்துக் கொல்லு.'
இப்படி ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு.

மேற்குறிப்பிட்ட பழமொழியின் உள்ளடக்கம் போல், எதிர்க் கட்சிகளின்மீது பழி சுமத்தி, எதிர்க் கட்சியை ஒழிக்க முற்படும் வித்தையை, அதிகாரத்திலிருக்கின்ற காங்கிரஸ்கட்சி நன்கு கற்றறிந்து இருக்கிறது.

தனக்கு எதிராகக் கூறும் ஆணித்தரமானவாதங்களுக்குப் பதில் கூறமுடியாது திக்கு முக்காடும் நிலையில், எதிர்க் கட்சியை மாசுபடுத்திவிடுவதின் மூலம், அதன் வாதங்களுக்குப் பதில்கூறும் பொறுப்பிலிருந்துத் தன்னை விடுவித்துக் கொள்ளுவது சுலபமாகும் என்பது காங்கிரசின் எண்ணம்.

அதுவுமன்றி எதிர்க்கட்சியின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையையும் பற்றையும், அவ்வாறு பழிபோடுவதின் மூலம், இல்லாது செய்து விடலாம் என்பதும் காங்கிரசின் உள்ளக் கிடக்கை.

இப்படி அபவாதம் கூறி, நமது கழகத்தைப் பொதுமக்களிடம் கறைப்படுத்தி விட வேண்டும் என்ற முடிவிற்கு காங்கிரஸ் இப்பொழுது வந்திருக்கிறது.

திராவிட நாடு கோரிக்கையை நாம் வெளியிட்ட நேரத்தில், அதை காங்கிரஸ் கட்சி ஒருபொருட்டாக மதிக்கவில்லை.

திராவிடநாடு கோரிக்கைக்கு வித்திட்ட நேரத்தில், அதுபற்றி அலட்சியமாக இருந்தது காங்கிரஸ் கட்சி.

வித்து வேரூன்றி, சிறு செடியாகக் காட்சியளிக்கத் தொடங்கியதும், அது, குப்பைக்கீரை என ஏளனம் பேசத் தொடங்கியது.

அருகுபோல் வேரோடி ஆல்போல் தழைக்கும் நிலை கண்டதும், காங்கிரஸ் கட்சி மிரளத் துவங்கி இருக்கிறது.

"ஓ! அந்த விருட்சம் வேறு ஒருவர் இடும் எருவில், பாய்ச்சும நீரில் வளர்ந்து ஓங்குவதாக இருக்கக்கூடும்" என அபாண்டம் கூறும் நிலைக்கு காங்கிரஸ் கட்சி வந்திருக்கிறது.

அதாவது, 'இந்தியாவின் ஐக்கியத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள, நாட்டுக்கு வெளியே இருக்கும் சிலரின் தூண்டுதலாக இருக்குமோ இந்த இயக்கம்' எனப் பேசக் கிளம்பி இருக்கிறது காங்கிரஸ் கட்சி.

இந்த அபாண்டத்தை, காங்கிரஸ் கட்சி இன்னும் அதிகார பூர்வமாகக்கூற முன்வரவில்லையானாலும், மக்கள்சபைத் தலைவரேனும் பொறுப்பான பதவியில் உள்ள சித்தூர்-அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் இப்பழியைச் சுமத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

நீதிபதிக்குள்ள நாக்கும் நடுநிலை பிறழா நேர் உள்ளமும் மக்கள் சபைத் தலைவரான அனந்தசயனம்அய்யங்காருக்கு இருக்கவேண்டும்.

ஆனால் அய்யங்காருக்கோ அந்த இரண்டும் இல்லை.

நீதிமன்றத்தில், வாங்கிய பணம் செரிக்க வழக்காடும் வக்கர புத்திபடைத்த வழக்கறிஞருக்கு இருக்கும் வம்பளப்பு குணமே, இந்த மக்கள் சபைத் தலைவருக்கும் இருக்கிறது.

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும். பிறவிக்குணம் மக்கள் சபைத் தலைவரானப் பிறகும், அய்யங்காரை விட்டுத் தொலைய மறுக்கிறது போலும்!

இந்தியாவின் ஐக்கியத்தைச் சீர்குலைப்பதில் நாட்டுக்கு வெளியேயுள்ள சிலருக்கு ஆசை இருக்கிறது எனக் கூறியுள்ள அய்யங்கார், யார் அந்த சிலர்? அந்தச் சிலர் உள்ள நாடு எது? என்ற கேள்விகளுக்கும் விடை கூறி இருக்கவேண்டும்..

ஏன் அதுபற்றி கூற மறந்தார்? தனது அடுத்தப் பேச்சிலாவது, அய்யங்கார் அதற்கு விடைகூறி ஆகவேண்டும்!

வெளிநாட்டில் உள்ள அந்த சிலருக்கும், திராவிட நாடு கோரிக்கையினருக்கும் உள்ளத் தொடர்பு என்ன? எவ்வாறு அத்தொடர்பு செயல் படுத்தப்பட்டு வருகிறது? என்றவினாக்களுக்கும், அபாண்டம் கூறிய அனந்தசயனம் அய்யங்கார் விளக்கமான பதில் தர கடமைப்பட்டிருக்கிறார்.

உலகிலுள்ள நாடுகள் அனைத்தையும் நேசிப்பதாகவும், அவற்றோடு நட்புறவுடன் வாழ விழைவதாகவும், அடிக்கடி இந்தியப் பிரதமர் அறிவுறுத்தி வருகிறார்.

ஆனால், ஆட்சிக்கே அடிப்படையாக இருந்துவரும் மக்கள் சபையின் தலைவராக உள்ள அனந்தசயனம் அய்யங்கார் உள்ளத்திலோ, இந்தியாவின் ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் நபர்களைக் கொண்டுள்ள நாடுகளும் உள்ளன என்ற நச்சுக் கருத்து உறைந்து கிடக்கிறது!

முரண்படும் கருத்து கொண்ட இருவர், ஒரே ஆட்சியில் இடம் பெற்றுள்ளனர்!

திராவிட நாடு கோரிக்கையினருக்கு, எந்த வெளிநாட்டினர் உதவி செய்கின்றனர்— எப்படி செய்கின்றனர்—அக் குற்றச்சாட்டை எப்படி அவர் அனுமானிக்கிறார் — என்ற வினாக்களுக்கு, நேர்மையான அரசியல் ஒழுக்கம் உருவாக்கப் படவேண்டும என்பதில் அக்கறை இருந்தால், அனந்தசயனம் அய்யங்கார் உடனடியாக விடை கூறியாக வேண்டும்.

உதவி கிடைப்பது உண்மை என்றே விவாதத்திற்காக ஒப்புக்கொள்வதானால், அதைப் பார்த்துக்கொண்டு இந்தியப் பேரரசின் துப்பறியும் துறையும், பாதுகாப்புத் துறையும் என்ன செய்கிறது என்ற கேள்விக்கும், இந்த அனந்தசயனம் பதில் தரவேண்டும்.

இந்த அபாண்டத்தை மேடையில் ஒப்பாரி வைக்க முன்வரும் சித்தூர் அய்யங்கார், வழக்கு மன்றத்திலே வழக்காட முன்வராதது ஏன் என்பதையும் விளக்கவேண்டும்.

இதேபோக்கில் முன்பு ஒரு முறை, சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் விஷத்தைக் கக்கி இருக்கிறார். அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி, இப்பொழுது, அனந்தசயனம் அய்யங்காரும் கொடு நஞ்சைக் கொட்ட முன்வந்து இருக்கிறார்.

இந்த அபாண்டத்தை, அனந்தசயனம் அய்யங்கார் வாபஸ் பெற முன்வரவேண்டும். அவர் வகிக்கும் பொறுப்பான பதவிக்குரிய இலட்சணம் அதுவாகத்தான் இருக்க முடியும்.

இல்லையானல், ஏதோ முச்சந்தியில் முணுமுணுத்துக் கிடக்கவேண்டிய ஒரு பெருமாள் கோயில் பட்டர், மக்கள் சபைத் தலைவராக உட்கார வைக்கப்பட்டிருக்கிறார் என்று தான் எண்ணவேண்டி ஏற்பட்டுவிடும். அது, அந்த சபையின் பெருமைக்கு இழுக்காகும்.

4,000 ஆண்டுக்கு முந்திய துறைமுகப்பட்டினம்

புராதனப் பொருள்கள் அடங்கிய பெரும் பொக்கிஷமாம்!

டமாஸ்கஸ்—

ஒரு நூற்றாண்டாக நான்கு நாடுகளின் ஆராய்ச்சிக் குழுவினர் கண்டு பிடிக்காமல் இருந்த 'செமிரா' என்ற 4,000 ஆண்டுக்கு முந்திய துறைமுகப்பட்டினத்தை சிரியாவைச் சேர்ந்த ஒரு பழம் பொருள்கள் ஆராய்ச்சியாளர் தாம் கண்டுபிடித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

வடஇந்தியாலிலுள்ள 'செமிரா' என்ற நகரத்தை, 'இதுகாறும் தெரியாமலிருந்த சரித்திர நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிவிக்கும் புராதனப் பொருள்கள் அடங்கிய பெரும் பொக்கிஷம் என்று சிரிய பழம் பொருள் ஆராய்ச்சி இலாகாத் தலைவர் தெரிவித்தார்.

புதியதோர் சாதனம் கண்டு பிடிப்பு!

டயரிலிருந்து திடீரென்று காற்று வெளியே சென்றாலும் அல்லது டயரிலும் தவாரம் ஏற்பட்டாலும் கார் ஓட்டுபவர் தொடர்ந்து ஓட்டிச் செல்ல வசதியளிக்கும் ஒரு மோட்டார் டயரை, 'குட்இயர் டயா ரப்பர் கம்பெனி' உற்பத்தி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காற்று வெளியே செல்வதைக் குறைக்கும் 'லைப் கார்ட்' என்ற டயருடன் இப்புது டயரை இக் 'கம்பெனி' ஒப்பிட்டுப் பார்த்தது இப்புதுக் கண்டு பிடிப்பு, 'ஒரு டயருக்குள் மற்றொரு டயராகும்' வெளிப்புறத்தில் சாதாரண அமைப்பிலும், உட்பாகத்தில் குறைந்த எடையிலும் நைலானல் செய்யப்பட்ட உறைகள் இருக்கின்றன. இதனைப் பல வாடகை மோட்டார்களில் பரீட்சித்துப் பார்த்துள்ளனர்.

உலகில் மிகச் சிறிய டெலிவிஷன் காமிரா

உலகத்தின் மிகச் சிறிய டெலிவிஷன் காமிராவைத் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாக கலிபோர்னியா எஞ்ஜினீயர்கள் நம்புகின்றனர். இந்தக் காமிராவின் அளவு $1\frac{3}{4}$ அங்குலமும், 2 அங்குலமும், 5 அங்குலமுமாகும். $1\frac{1}{2}$ பவுண்டு எடையுள்ள இந்தச் சிறு காமிரா பார்ப்பதற்குக் கஷ்டமான இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை உடனடியாகக் காண்பதற்கு விமானிகளுக்கும், எஞ்ஜினீயர்களுக்கும் வசதியளிக்கின்றது.

புதிய கொள்கை வகுக்கின்றனராம்!

புதுடில்லி, ஜூன் 11—

துணி பற்றிய இந்தியப் பேரரசினரின் வாணிப, கைத்தொழில் இலாகா ஒரு புதிய கொள்கையை வகுத்து வருவதாகத் தெரிகிறது. துணி ஏற்றுமதியை அதிகமாக்குவதும், உள்நாட்டில் துணி விலை உயராமல் பார்த்துக்கொள்வதும், துணி வினியோகத்தை ஒழுங்குபடுத்துவதும் இந்தப் புதிய கொள்கையின் நோக்கமாகும்

10 சதம் முதல் 15 சதம் வரை துணி விலை அதிகரித்திருப்பதாகவும், இதனல் துணி ஏற்றுமதி குறைந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

1955 சனவரி—ஜூன் திங்களில், 28 252 கோடி கெஜம் துணி ஏற்றுமதி செய்யப்பட்டது; ஆனல் இந்த ஆண்டு அதே காலத்தில், இந்த ஏற்றுமதி 24 063 கோடி கெசமாகக் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வளவு தாராளம்!

தென்னாட்டுப் பாய்த் தொழிலுக்கு டில்லி தரும் மானியத் தொகை

புதுடில்லி, ஜூன் 10—

பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், மண் பாண்டங்கள், புடவைகள் உற்பத்தியின் முன்னேற்றத்திற்காக இந்தியப் பேரரசினர் ரூ. 1,75,000 மானியமாகவும், ரூ. 76,250 கடனுகவும் அனுமதித்துள்ளனர் எனத் தெரிகிறது.

திருநெல்வேலியில் கோரைப் பாய் முடையும் தொழிலுக்கு ரூ 3,300 மானியம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

பிச்சைக்காரர்களுக்குத் தொழில் விடுதிகள்

ரூ. 1,39,000 ஒதுக்கியுள்ளனர்

சென்னை, ஜூன்—

சென்னை மாநிலத்தில் உடல் வலிவு பெற்ற 500 பிச்சைக்காரர்களுக்கான 5 தொழில் விடுதிகளும், நோயுற்றவர்களும், அங்கவீனருமான 400 பிச்சைக்காரர்களுக்கான 8 ஏழை விடுதிகளும் விரைவில் துவக்கப்படும்; இவ் விடுதிகளுக்காக ரூ. 1 39,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொழில், பிச்சை விடுதிகளில் உள்ளவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ 10 அரசினர் தருவர்.

300 இளங்குற்றவாளிகளுக்கான விடுதியும் திறவப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் முடிவாகிவிடுமாம்!

சென்னை, ஜூன் 9—

ஒருமுனை விற்பனை வரிப் பட்டியலில் எந்தெந்தப் பொருள்களைச் சேர்க்க வேண்டுமென்பது இத் திங்கள் இறுதிக்குள் முடிவாகிவிடுமென்று அமைச்சர் மாணிக்கவேலர் தகவல் தந்துள்ளார்.

ஒலியினும் வேகமாகச் செல்லும் விமானம்

பரிசோதனையில் உள்ளதாம்!

ராக்கெட்டும், வழக்கமான 'ஜெட்' எஞ்சின்களும் சேர்ந்து விசைச் சக்தி அளிக்கும் விமானத்தை பிரெஞ்சு விமானத் தொழில் உலகம் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறதாம்!

அது, ஒலியினும் வேகமாய்ச் சென்று இடை மறிக்கும் விமானம்! அது, பிரமாதமான முறையில் வேகமாக மேலே எழும்! அது, 3,000 அடிக்குக் குறைவாகத் தரையில் ஓடி எழும்பக்கூடியது!

ராக்கெட் எஞ்சின் பெரிய சக்தியை உற்பத்தி செய்கிறது; உயரம், அந்தச் சக்தியைப் பாதிப்பதில்லை. 'ராக்கெட் ஜெட்'டுகளை பிரிட்டன், இத்தாலி ஆகிய நாடுகளும் பரிசோதனை செய்துகொண்டிருக்கின்றன.

சனாதனிகளின் அடாத செயல்!

தாழ்த்தப்பட்டோர் கோயிலில் நுழைய எதிர்ப்பு

23 பேர் கைது செய்யப்பட்டனர்

காசி, ஜூன் 10—

காசி விசுவநாதர் கோயிலில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை நுழையச் செய்வதற்காகச் சத்தியாகிரகம் செய்யும் தொண்டர்களுக்கும்— சனாதனிகளுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக 23 பேர் கைதுசெய்யப் பட்டனர்.

'அரிஜன கோயில் பிரவேச சமதி'யைச் சேர்ந்த தொண்டர்களும், சத்தியாக்கிரகிகளும் உள்படச் சுமார் 200 பேர் ஊர்வலமாக வந்து விசுவநாதர் கோயிலில் நுழைய முயன்றபோது, சனாதனிகள் அவர்களைக் கோயிலில் நுழைய முடியாதவாறு தடுத்து விட்டதையொட்டியே கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது.

நகர மாஜிஸ்திரேட் அவர்கள் குழுமியிருந்த மக்களைக் கலைந்து போகச் சொன்னபோது அவர் வார்த்தையை மக்கள் மதிக்காததையொட்டியே 23 பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்கள் சௌக்தாளுவில் ஒரு மணி நேரம் காவலில் வைக்கப்பட்டு, பின்னர் கலவர நிலைமை கட்டுக் கடங்கியபோது விடுதலை செய்யப் பட்டனர்.

கிளர்ச்சியில் ஈடுபட 10,000பேர் உள்ளனர்

இந்து மதத் தலைவர் அச்சுறுத்துகிறார்!

அமிர்தசரசு, ஜூன் 11—

"மகாபஞ்சாப் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக 24 மணி நேர அறிவிப்பின் மீது, எல்லா விதமான தியாகங்கள் செய்வதற்கும், கிளர்ச்சி செய்வதற்கும் தயாராகவிருப்பதாகச் சுமார் 5,000 ஆடவரும், மகளிரும் உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டிருக்கின்றனர்" என்று சமிதியின் தலைவரும், அனைத்திந்திய இந்து மகா சபையின் உதவித் தலைவருமான கேப்டன் கிஷாப் சந்திரா என்பவர் அறிவித்துள்ளார்.

இப்போராட்டத்தில் இறங்க இதேமாதிரியாக ஏற்கனவே 5,000 பேர்கள் சேர்ந்துள்ளதாகவும், ஆக மொத்தம் கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு 10 000 பேர் தயாராக இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

துணிக்கு விதிக்கப்படும் தீர்வை வளருகிறது?

ஏற்றுமதியை அதிகரிக்க இந்திய சர்க்கார் நோக்கம்?

பம்பாய், ஜூன் 11—

துணிக்கு விதிக்கப்பட்டுள்ள தீர்வையை கணிசமாக உயர்த்தப்படும் என்று அறியப்படுகிறது. இந்தத் தீர்வையுடன் விற்பனை வரியும் சேர்க்கப்படும் என்று கூறப்படுகிறது. இந்தத் தீர்வையை விதிக்க இந்தியப் பேரரசு தீர்மானித்துவிட்டதாகவும், சதுர கெசத்துக்கு 2 அணு வீதம் விதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

உள்நாட்டில் துணி உபயோகம் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தி, ஏற்றுமதியைஅதிகப்படுத்துவதற்கு வழி செய்ய வேண்டும் என்பது இந்தத் தீர்வையின் நோக்கம்.

பெரம்பூர் தொழிற்சாலைக்கு மேலும் இயந்திரங்கள்?

புதுடில்லி, ஜூன் 8—

சென்னை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலைக்கு மேலும் இயந்திர சாதனங்கள் வாங்குவதற்காக விரைவில் வெளி நாடுகளில் 'ஆர்டர்கள்' கொடுக்கப் படுமாம்.

மக்கள் சபை உறுப்பினரின் 'தேசத்தொண்டு'

வினோபா குறிப்பிட்ட புதுடில்லி பொது வாழ்வின் இலட்சணம்

புதுடில்லி, ஜுன் 11—

ரூ 1,600 பெறுமானமுள்ள நகைகளுடன் தன் பெண்ணைப் 'பறி'கொடுத்த மக்கள்சபை உறுப்பினர் ஒருவர், புதுடில்லி போலீஸ் கோர்ட்டில் புகார் மனு ஒன்று தாக்கல் செய்திருக்கிறார்.

தான் வசித்த கட்டிடத்திலேயே வசித்துவரும் மற்றொரு மக்கள் சபை உறுப்பினர்தான் தன் மகளை நகைகளுடன் கடத்திச் சென்று விட்டதாக புகாரில் அவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

கடத்திக்கொண்டு போகப்பட்டதாகச் சொல்லும் பெண், நேற்று நகர மாஜிஸ்திரேட் ஒருவர் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறாராம்; வாக்குமூலம் என்ன என்பது பற்றி தகவல் இல்லை

மக்கள்சபை உறுப்பினர்கள் ஈடுபட்டிருக்கும் 'மக்கள் தொண்டு' எவ்வளவு மகத்தானதாக இருக்கிறதென்று பார்த்தீர்களா?

டில்லி நகரத்தின் அருவருக்கத்தக்க பொதுவாழ்வுச் சூழ்நிலை பற்றியும், பொதுமக்கள் பணம் வெறும் நீராக இறைக்கப்படும் அநீதி பற்றியும் சில நாட்களுக்கு முன்பு வினோபா பாவே பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

3,160 அடி நீளமுள்ள மீன்காரா அணை

4,000 ஏகராவுக்குப் பாசன வசதியளிக்கும்

சென்னை, ஜுன் 11—

மலபார் மாவட்ட பாலக்காடு வட்ட முதலமடை கிராமத்தருகே கட்டப்படவிருக்கும் மீன்காரா அணைத் திட்டந்தான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மலபார் மாவட்டத்தில் துவக்கப்படும் முதல் அணைத் திட்டமாகும்.

இந்த அணையின் நீளம் 3,160 அடி நீளமிருக்குமென்றும், அதில் 2,860 அடி மண்ணாலும், 300 அடி செங்கல், சுண்ணாம்பு கட்டிடமாக அமைக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

இதன் வலப்புறக் கால்வாய் 3,110 ஏகராவுக்கும், இடப்புறக் கால்வாய் 990 ஏகராவுக்கும் பாசன மளிக்குமாம்.

ஆண்டொன்றுக்கு 1,025 டன் அதிகப்படி அரிசி உற்பத்தியாகுமாம்

கொல்லங்கோடுக்கு தென்கிழக்கிலுள்ள மலையிலிருந்து உற்பத்தியாகும் மீன்காரா நதி, பொன்னாச்சி, பாலக்கோடு வட்டங்களுக்கிடையே 10 மைல் தொலைவு எல்லையாக அமைந்து முதலமடைக்கு அருகில் கோவிந்தபுரம் பாலத்தருகே பாலக்கோடு வட்டத்திற்குள் நுழைகிறது. அந்த இடத்தில் 'பாப்பாத்தி பள்ளம்' என்ற இன்னொரு நதி அதனுடன் இணைகிறது. இந்த இரு நதிகளின் சங்கமத்திற்குப் பின்னர், அந்நதி, மேற்கில் ஒன்ரை மைல் ஓடி ஒரு செங்குத்தான குன்றைச் சார்ந்து பாய்கிறது. அந்த இடத்தில்தான் மீன்காரா அணைக்கட்டப்படுகிறது.

உணவுப் பொருள்களில் கதிரியக்கம் பரவியது

நீர்வளிக் குண்டு பரிசோதனையின் விளைவு

கல்கத்தாவில் நாள்தோறும் உபயோகப்படுத்தப்படும் காய்கறிகள், பால், நெய், அரிசி முதலிய பொருள்களில்கூடக் கதிரியக்கம் காணப்படுகிறதாம்!

சமீபத்தில் பசிபிக்கில் நடைபெற்ற நீர்வளிக் குண்டு பரிசோதனைக்குப்பின், கதிரியக்கத்துடன் பெய்த மழைத் தண்ணீரில் விளைந்த காய்கறிகளில் அணுக்கதிர் இயக்கச் சக்தி இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

ஒரு குலத்துக்கொரு நீதி!

உள்நாட்டுக்கு ஒன்று! வெளிநாட்டுக்கு மற்றொன்று!

'பெரும்பான்மை வாக்கைக் கொண்டு மொழிப் பிரச்சினையை முடிவுகட்டக் கூடாது'

'சுவிஸ்போல் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை இலங்கையில் ஆட்சிமொழிகளாகக் கொள்ளலாம்'

'வேறு வழியற்றுப் போனதினாலேயே சத்தியாக்கிரகத்தை தமிழர் மேற்கொண்டனர்'

"..........சிங்களத்தை மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக ஆக்குவது என்று, தேர்தல் காலத்திலேயே, மகா ஜன ஏக்சத் பெருமுனை கூறியதுஉண்மை தான். அதேபோலத்தான் ஐக்கிய தேசியக் கட்சியும் கூறியிருந்தது. ஆனால், மகா ஜன ஏக்சத் பெருமுனை தனது எதிரியை முறியடித்தது, மொழிப் பிரச்சினையில் அல்ல; சிங்கள மக்கள், 'சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்க வேண்டும்' என்று எந்தத் தேர்தலில் வாக்களித்தார்களோ, அதே தேர்தலில் தமிழ் மக்களும், அதே அளவு ஒற்றுமையுடன், 'தமிழுக்கும் சிங்களத்தைப் போலவே சம அந்தஸ்து வேண்டும்' என்று, வாக்களித்திருக்கிறார்கள் என்பதையும், பண்டார நாயகாவும், அவரது கட்சியினரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு ஜனநாயகப் பெரும்பான்மையினரும், அவ்வளவு பெரிய தேசிய சிறுபான்மையினரின் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ள விருப்பங்களை, அலட்சியம் செய்து விட முடியாது.

"தேசிய சிறுபான்மையினரைப் பொறுத்த விவகாரங்களுக்கு, பெரும்பான்மையினர் ஆட்சி என்ற கொள்கையை முன்வைப்பது, ஜனநாயகத்தையே அழித்து ஒழிப்பதாக முடியும். இலங்கைத் தீவின் அமைதிக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ளும் துணிவிருந்தாலன்றி, இலங்கை சர்க்கார், தமிழ் பேசும் மக்களிடை சிங்களத்தைத் திணிக்க முடியாது என்பதைத்தான், கடந்த செவ்வாயன்று கொழும்பு நகரில் நடைபெற்ற கலகங்கள் தெளிவாக எச்சரிக்கின்றன."

—'டைம்ஸ் ஆப் இந்தியா' 7—6—56

★

"உணர்ச்சிகள் சம்மந்தப்பட்ட மொழி விவகாரங்களில், பெரும்பான்மை வாக்கு பலம், பிரச்சினைக்கு முடிவு காண அனுமதிக்கப் பட முடியாது. சுவிட்சர் லாந்தைப் போல ஒரு மொழிக்கு மேலான பல மொழிகளை, இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு, ஆட்சி மொழிகளாக வைத்துக்கொள்வதற்கு எதிராக நடைமுறை பூர்வமானதோ, கொள்கை பூர்வமானதோ ஆன கருத்துக்கள் ஏதும் இல்லை. எப்படி இருந்த போதிலும், புதிய ஆட்சி மொழி மாற்றம் ஏற்படுவதைப் பொறுத்த, ஸ்தல விவகாரங்களுக்குத் தமிழ் மொழியை உபயோகித்துக் கொள்வது, அரசியல் அல்லது நிர்வாகம் போன்ற துறைகளில் உருவெடுக்கக் கூடிய பாரபட்சமான போக்குகளிலிருந்து பாதுகாப்பு—இவற்றிற்கு ஒரு உடன்பாடுதேவை என்று கோரப்பட்டது. எனவே, இலங்கைத் தீவின் பிரதான இரண்டு சமூகங்களிடையே எழுந்துள்ள ஆழமான பிளவுக்கு, தாம் பொறுப்பாளி அல்ல என்று, பண்டார நாயகா, முழுவதும் நழுவிக் கொள்ள முடியாது. போட்டி அரசியல் கட்சிகளின்மீதோ, அல்லது, தங்களின் நியாயமான அதிருப்தியைக் காட்டிக் கொள்வதற்கு வேறு வழியற்றுப் போய்விட்ட சத்தியாக்கிரகிகள் மீதோ, சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களுக்கான பொறுப்பைச் சுமத்த முடியாது. தமிழ் குடிமக்களின் அரசியல் உரிமைகளைப் பாதிக்கிற பல்வேறு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பின், இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது; எனெனில், கதியற்றுப் போய்விட்ட சிறுபான்மையினரை ஒழிப்பதற்கான மற்றொரு நடவடிக்கையாகவே மசோதா காட்சியளிக்கிறது. அதே நேரத்தில், தமிழர்கள், ஒரு சுதந்திர நாடு வேண்டும் என்பது போன்ற, நடைமுறைக்குப் புறம்பான கோரிக்கைகளைக் கைவிட்டு விட வேண்டும்.

"தமிழ் மொழி பேசுபவர்கள், தமிழை தங்களின் கலாச்சார அடிப்படையாகக் கொள்வது என்ற உறுதி பூண்டிருக்கும்வரை எவரும் தமிழ் மொழி வளர்ச்சியைக் குலைத்துவிட முடியாது என்பதை அவர்கள் உணர்ந்தாக வேண்டும்."

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 9—6—56.

இந்தியா—பாகிஸ்தான் போர் தவிர்க்கமுடியாததாம்!

காஷ்மீர் பிரச்சினையே காரணமாம்!

தெமாஸ்கஸ், ஜுன் 11—

"தகராறுக்குரியதாயுள்ள காஷ்மீர் பிரதேசம் சம்பந்தமாக இந்தியாவுக்கும் — பாகிஸ்தானத்திற்கும் இடையே போர் நிகழ்வது தவிர்க்கமுடியாததாகும்," என்று சிரியாவின் பாகிஸ்தான் மந்திரி திரு. லால்ஷா புகாரி பத்திரிகை நிருபர்களிடை கூறியுள்ளார்.

"இந்தியா காஷ்மீரத்தைப் பலாத்காரத்தினால் ஆக்கிரமித்துக் கொண்டது; பொதுமக்கள் வாக்கெடுப்பு எப்படியது குறித்துக் கூறப்பட்ட எல்லாவகையான யோசனைகளையும் இந்தியா நிராகரித்துவிட்டது; நாம் போதிய அளவு வன்மையுடையவர்களாயிருந்தால் எப்படியாவது காஷ்மீரத்தை மீட்பதற்கு பலாத்காரத்தைப் பயன்படுத்திவிடுவோம்; சட்டபூர்வமாக எங்களுக்குரியதான காஷ்மீரத்தை மீட்பதற்கு இந்தியாவுக்கும் பாகிஸ்தானத்திற்கும் இடையே போர் நிகழ்வது தவிர்க்க முடியாததாகும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், 'பாலஸ்தீனம், வட ஆப்பிரிக்கா சம்பந்தமாக அரபு நாடுகள் கொண்டுள்ள கொள்கைக்கும் பாகிஸ்தான் ஆதரவு காட்டுகிறது. என்னுடைய நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையினால் பாதிக்கப்படுகிறது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பாகிஸ்தானுக்கு விரோதமானதாகும். அது பாகிஸ்தானையே அழித்துவிடவும் கூடும்,' என்று குறிப்பிட்டார்.

ரூ. 1,13,419 அபராதம் வசூலிக்கப்பட்டதாம்!

சென்னை, ஜுன் 11—

1953ம் ஆண்டில் பருத்திச் சூதாட்ட அபராதமாக ரூ 35,000 வசூலிக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் இது 72 000 ரூபாயாக உயர்ந்தது. 1955ல் 1,13,419 ரூபாய் கிடைத்தது. இந்த ஆண்டில் இது வரை ரூ 30,000 தான் கிடைத்துள்ளது.

பருத்திச் சூதாட்டம் ஆடியதாக இவ்வாண்டு 340 பேர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர்; போன ஆண்டு 297 பேர் அனுப்பப்பட்டனர். ஜுன் 7-ம் நாளன்று 69 பருத்தி சூதாட்டத்தார்கள் கைது செய்யப்பட்டனர்; மற்றும் 50 பேர் தலைமறைவாயினர்.

நிசாமின் ஆயுத போலீஸ் படை

'இந்தியாவுக்கு எதிராக ஐந்தாம் படையாக மாறும்'

மாவட்ட நீதிபதி முன்னிலையில் வழக்கறிஞரின் மனு தாக்கல்

'ஐதராபாத் நிசாம் தன்னுடைய சொந்தத் தேவைக்காக ஒரு ஆயுதப் போலீஸ் படையை வைத்துக் கொண்டிருப்பது சட்டப்படி செல்லுபடியாகுமா?' என்று, திரு. பி ஜி. கேஸ்கர் என்ற வழக்கறிஞர் மாவட்ட நீதிபதி முன்பு ஒரு மனு தாக்கல் செய்துள்ளார்.

"துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் இந்தப் படையில் ஆயிரம் போகள் இருக்கிறார்கள்; துப்பாக்கி சுடுவதற்குப் பயிற்சி அளிப்பதற்காக இவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள்; இந்தச் சட்ட விரோதமான படை இந்தியாவுக்கு எதிராக ஒரு ஐந்தாம் படையாக மாறிவிடக்கூடும்," என்று அவர் தன் மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தத் தகவல்களைப் பதிவு செய்துகொண்டு, இது சம்பந்தமான கடிதங்களையும், ரிகார்டுகளையும் தம்மிடம் காட்டவேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார்.

வைதீகர்கள் எதிர்ப்பை எதிர்பார்க்கிறோம்!

சாதி ஒழிப்பு குறித்து வினோபா பாவே

வாலாஜாபாத் ஜுன் 12—

"கதர்த் தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள், ஆதாரக் கல்வி, சாதி ஒழிப்பு முதலியவற்றைப் பூதான இயக்கத்தோடு தொடர்பு படுத்தப் போகிறேன். சாதிய ஒழிப்புச் சம்பந்தமாக வைதீகர்களின் எதிர்ப்பு ஓரளவுக்கு இருக்குமென நாம் எதிர்பார்க்கலாம். வேத ஆகமங்களில் பற்றுக்கொண்டவனும், அவற்றை நன்கு பயின்றவனுமான என்னைப் போன்றவர்களே சாதிப் பிரிவினை கூடாது என்று வற்புறுத்துவதால், 'சாதிப் பிரிவினை கூடாது' என்று கூறுவது மக்கள் அனைவருடைய நன்மைக்காகத்தான் என்று அவ்வைதீகர்களே மிக விரைவில் உணர்ந்து கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

"காசியில் உள்ள வைதீகப் பண்டிதர்கள் பூதானத்திற்கு ஆதரவு காட்டினார்கள்; அதுபோலவே, தென்னிந்தியாவில் உள்ள வைதீகப் பண்டிதர்களும் ஆதரவு காட்டுவதற்குப் பின்வாங்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்," என்று ஆச்சாரியா வினோபா பாவே, சர்வோதய சங்க ஊழியர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சாதி ஒழிப்பு, ஆதாரக்கல்வி முதலியவற்றைப் பூதான இயக்கத்தோடு தொடர்பு படுத்திப் பணியாற்றும் செயலை முதலில் தமிழகத்தில்தான் தாம் செய்யப்போவதாக அவர் கூறினார்.

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அச்சு இயந்திரங்கள்

பிரிட்டனிடமிருந்து 22 சீல்பெட் ரோடரி அச்சு இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய இந்தியாவுக்கு வந்து சேரும். சர்க்கார் அச்சுக்கூடங்களின் தேவைக்காக இவை வாங்கப்படுகின்றன.

ஏழை மாணவர் இலவச விடுதி

சென்னை — கொருக்குப் பேட்டை, 18, காக்ரன் பேசின் ரோடு, ராவ்சாகிப் வி. தர்மலிங்கம் (பிள்ளை) நினைவு மாணவர் இலவச விடுதி 15—6—56-ல் திறக்கப்படுகிறது. புதியதாக சேர விரும்பும் மாணவர்கள் 1—7—56 தேதிக்குள் விடுதியில் சேர்க்கப்படுவார்கள். அனுமதி விண்ணப்ப பாரங்கள் வடசென்னையிலுள்ள எல்லா உயர்தரப் பாடசாலைகளிலும் மேற்படி விடுதியில் கிடைக்கும்.

கிராமப் புறங்களில் வசிப்பது, சென்னையில் கல்வி பயிலும் தாழ்த்தப்பட்டோர் — பிற்படுத்தப்பட்டோர் இன மாணவர்கள், மேற்படி விடுதியில் சேர்க்கப்படுவார்கள்.

மறைவு

5-6-56 மாலை 6-மணியளவில் அக்கராபாளையம் தி. மு. கழகத்தில் அரும்பணியாற்றி வந்த தோழர் ம. குமாரசாமி அவர்கள் இயற்கையடைந்தார் என்ற துக்கச் செய்தியைக் கேட்டு மிக வருந்துகிறோம். தம் வாழ்நாளெல்லாம் வறுமையே பூண்டிருந்த தோழர் ம. குமாரசாமி, கழகப்பணியே தன் பணியென அரும்பாடுபட்டவர்.

அவரின் சவத்தை தி. மு. கழகத் தோழர்கள் கருப்புக் கொடிகளுடன் ஊர்வலம் சென்று அடக்கம் செய்தனர். சவஅடக்கத்திற்காக ஏற்பட்ட செலவை தி. மு. கழகத் தோழர்களே ஏற்றனர்.

மறைந்த தோழருக்கு மனைவியும், ஓர் மகவும் உண்டு. அவரது பிரிவால்வாடும் குடும்பத்தினருக்கு அக்கராபாளையம் தி. மு கழகம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. கழக [illegible] அவர்தம் குடும்பத்தினருக்கு [illegible]

ஏழை - பணக்காரர் ஏற்றத் தாழ்வு குறையும் காலம் வந்துவிட்டதாம்!

தொழில் வளர்ச்சியில் தனியார் துறை மறைய இந்தியப் பேரரசு எண்ணவில்லையாம்!

சுரங்கத் தொழில் அதிபர்களுக்கு மத்திய அமைச்சர் 'அபயம்' தருகிறார்!

பெங்களூர், ஜுன் 12—

"எல்லா முக்கியத் தொழில்களின் உற்பத்தியும் அரசினரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்க வேண்டுமென்பது நோக்கம்;

"தொழில் வளர்ச்சித் துறையிலிருந்து தனியார் மறைய வேண்டுமென்று இந்தியப் பேரரசினர் எண்ணவில்லை. வேலையை அரசினர் துறையென்றும், தனியார் துறையென்றும் பிரித்துக் கொள்வதுதான் நோக்கம்,"

என்று, மத்திய இயற்கை வள அமைச்சர் கே. டி. மாளவியா கூறியுள்ளார்.

"சுரங்கத் தொழில் அதிபர்கள் புதுத் தொழில்களைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை; எப்போதும் போலவே எல்லாம் நடக்கும்.

"ஏழை — பணக்காரர்களுக்குள்ள ஏற்றத் தாழ்வு குறைய வேண்டுமென்கிற காலம் வந்துவிட்டது; இது விரைவில் நிறைவேற வேண்டும்.

"உற்பத்தி, விநியோகம் இரண்டும் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும்; இதை எவ்வளவு விரைவில், எவ்வளவு சிறப்பாகச் செய்ய முடியும் என்பதே கேள்வி; இதைக் காலம்தான் தீர்மானிக்கும்" என்றெல்லாம் அமைச்சர் கூறியுள்ளார்.

சென்னை சர்க்கார் கண்விழிப்பு?

தீவிர நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு

சென்னை, ஜுன் 12—

விரைவிலேயே சென்னை சர்க்கார் எல்லா அரிசி வியாபாரிகளுக்கும் ஓர் கடுமையான எச்சரிக்கை விடுவிக்குமென்றும், அரிசியை விலைக்கு விற்காமல் அவர்கள் பதுக்குவார்களேயானால் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்குமென்றும் தெரிய வருகிறது.

இதுபற்றி சென்னை அரசியலார் தீவிரமான ஆலோசனை நடத்தி வருகிறார்களாம்! செயற்கையாக விலைவாசிகளை அதிகரிக்கும் எந்த முயற்சியையும் சர்க்கார் சகித்துக் கொண்டிருக்காது என்று அறிவிப்பதற்கான பிரரேபணைகளை தயாரித்து வருகிறார்களாம்!

விலையை அதிகரிப்பதைக் குறித்து சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுக்குமென்று தெளிவுபடுத்தினால், கிராமங்களில் அதிக அளவில் கொள்முதல் செய்து, அரிசியைப் பதுக்கும் போக்கு தடுக்கப்படும் என அரசினர் கருதுகின்றனராம்.

சென்னை அரசியலாரின் உறுதியான உத்தரவு

சர்க்கரை விற்பனைமீது ஓரு விற்பனை வரி வசூலிப்பதை ஒரு முனையில் மட்டும் வசூலிக்குமாறு வர்த்தகவரி இலாகா அதிகாரிகளுக்கெல்லாம் சென்னை அரசினர் உறுதியான உத்தரவு அனுப்பியுள்ளனர்.

சர்க்கரை வாங்குவோரிடமிருந்து முக்கிய விற்பனைவரியென்று அதிக விற்பனைவரி வசூலிக்கப்படுவதாக அரசியலாருக்கு புகார்கள் வந்ததால் இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்.

'திரும்பிப் போ' என்று குரலெழுப்பினர்!

நாகபுரி, ஜுன் 12—

நேற்று மாவட்ட காங்கிரஸ் கூட்டமொன்றில் பேசுவதற்காக, விதர்ப்பப் பகுதி காங்கிரஸ் குழுத் தலைவர் கோபால் ராவ் கேட்கா அமராவதிக்கு வந்தபோது, சம்யுக்த மகாராஷ்டிரத்தை ஆதரிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கருப்புக் கொடிகள் பிடித்து, 'திரும்பிப் போ' என்று குரலெழுப்பியதாகவும், அவரை நோக்கிச 'செருப்பு'களை வீசியதாகவும் செய்திகள் அறிவிக்கின்றன.

தவறான எண்ணம் ஏற்பட முயற்சிகள்?

காங்கிரஸ் இணைவது பற்றி அகாலிதளத் தலைவர் விளக்கம்

அமிர்தசரஸ், ஜுன் 11—

"அகாலிதளம் ஒரு சுதந்திர நிறுவனமாகவே திகழும். காங்கிரஸ் கட்சியுடன் இணைவது சம்பந்தமான பிரச்சினையே அதற்குக் கிடையாது"

என்று, சிரோமணி அகாலிதளத் தலைவர் தாராசிங் தெரிவித்துள்ளார்.

"பஞ்சாபின் வருங்காலம்பற்றி முடிவு செய்த பின்னர் அகாலிதளம் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்குரிய வழி வகுக்கப்பட்டுள்ளது; எனினும், இதனால் காங்கிரசுடன் உறவு அபிவிருத்தி அடைந்துவிட்டதாகப் பொருள்படாது

"நாங்கள் காங்கிரசுடன் உறவு கொள்வது சம்பந்தமாகத் தவறான எண்ணம் உண்டாகுமாறு செய்யச் சில பகுதிகளில் முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

"எங்கள் கொள்கைக்கு முரணாகவும், நாட்டின் நலத்திற்கு ஏற்றதல்ல என்று நாங்கள் கருதும் அளவிற்குமுள்ள அரசாங்கத் திட்டங்களில் நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம்; அவற்றை எதிர்க்கவும் செய்வோம்.

"காங்கிரஸ் கட்சியுடன் எங்களுக்கு இப்போதுள்ள உறவே நீடித்திருக்கும்; அதனுடன் எங்கள் உறவை வளர்த்துக்கொள்வதற்காக எந்தக் காங்கிரஸ் தலைவருடனும் நாங்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தவில்லை," என்றெல்லாம் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழிலாளர் துயரம்!

பெங்களூர், ஜுன் 12—

நகரில் ஆறு பெரிய பட்டு நெசவுத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட 1,500 நெசவாளர்களில் சுமார் 300 பேர் ஜுன் 12-ந் தேதி முதல் அரசாங்க அலுவலகத்திற்கு அருகிலுள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்களாம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்ணா சுற்றுப் பயணம்

★

ஜுன் 14 : மாலை—இராமநாதபுரம்
இரவு—பரமக்குடி
„ 15 : மாலை—திருவில்லிப்புத்தூர்
இரவு—தளவாய்புரம்
„ 16 : மாலை—சாத்தூர்
இரவு—விருதுநகர்
„ 17 : —அருப்புக்கோட்டை

அண்ணா அவர்களுடன் தோழர்கள் கண்ணதாசன், எம். எஸ். இராமசாமி, முகவை, ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கழகக் கூட்டம்

★

வேளாநந்தல்
(திருவண்ணாமலை வட்டம்)
15—6—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : மு. சீனுவாசன்
பேசுவோர் :
ப. உ. சண்முகம்
வ. குமாரசாமி
பெ. சு. ப. சாரங்கபாணி
து. சுப்பிரமணியம்

என்றாவது ஒரு நாள் ஒப்புவார்களாம்!

காமராசர் நம்பிக்கை!

கோயம்புத்தூர், ஜுன் 12—

திரு—கொச்சி வழியாகப் பாய்ந்து கடலில் வீணாகும் மிகுதித் தண்ணீரை சென்னை மாநிலத்திற்குத் திருப்பிக்கொள்ள என்றாவது திரு—கொச்சி அதிகாரிகள் ஒப்புக் கொள்வார்களென்று தாம் உறுதியாக நம்புவதாக முதலமைச்சர் காமராசர் கூறினார். இதற்கு சிறிது காலமாகலாமென்று அவர் குறிப்பிட்டார்.

ஸ்டாலின் குற்றங்களை விசாரிக்கும் யோசனை?

பாரிஸ், ஜுன் 11—

ரஷ்யப் பொதுவுடமைக் கட்சியின் பொதுக்காரியதரிசியான குருஷ்சேவ், ஸ்டாலின் செய்த குற்றங்களை நிரூபிப்பதற்காக நீதி மன்றத்தில் விசாரணை நடத்த வேண்டுமென்று சோவியத் தலைவர்களிடம் கூறியிருப்பதாகச் செய்தி ஒன்று வெளிவந்துள்ளது.

தற்காப்பு அமைச்சர் முதலமைச்சரானார்

இரங்கூன், ஜுன் 12—

பர்மா தற்காப்பு இலாகா அமைச்சர் பா-சுவே ஒருமனதாக புதிய முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு 41 வயது ஆகிறது.

மத வேறுபாடின்றி அனைவருக்கும் ஒரேவகையான சிவில் சட்டம்

மத்திய அரசாங்கத்தின் விருப்பம்

கர்னூல், ஜுன் 11—

"இந்திய யூனியனிலுள்ள எல்லா மக்களுக்கும் மத வேறுபாடின்றிப் பொதுவான சிவில் சட்டம் ஒன்றை உருவாக்க இந்திய அரசாங்கம் விரும்புகிறது"

என்று, மத்திய அரசாங்க உள்நாட்டிலாகா மந்திரி திரு. பி. என். தத்தார் கூறியுள்ளார்.

இந்தியா முழுவதிலும் வாழுகின்ற மக்களிடையே பழக்க வழக்கங்கள், நாகரிகம் முதலியவைகளில் ஒரு சில வேறுபாடுகள் இருந்தபோதிலும் பெரும்பாலும் அவை ஒரே தன்மையனவாகவுள்ளனவாம்! எனவே, அவர்களிடையே பெருத்த அளவில் தொடர்பு ஏற்படுத்துவதற்கு ஒரே மாதிரியான சிவில் சட்டம் இருக்க வேண்டுவது இன்றியமையாததாம்.

இந்த சட்டத்தின் அடிப்படையில் சில முன்னேற்றகரமான மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவாம். இந்த சட்டத்தை முறையாக அமைக்கும் பணி விரைவில் முடிவுற வேண்டுமென்று பண்டித நேரு விரும்புவதாகவும் அவர் அறிவித்தார்.

சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்களாயிருந்த பெண்களுக்கு இப்போது இந்த சட்டத்தில் அதிக உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறைகளைக் களையுமாறு குரலெழுப்புகின்றனர்

'வாக்குறுதிகள் காலங்கடத்தும் தந்திரமாகும்'

'கோரிக்கைகளை விட்டுக் கொடுக்க இயலாது'

அநீதிகளை எடுத்துரைக்க பிரதமர் நேருவிடம் தூது செல்ல என். ஜி. ஓக்கள் முடிவு

சென்னை, ஜுன் 12—

கோவையில் என். ஜி. ஓ. தூதுக் குழுவினருக்கு, நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அளித்த வாக்குறுதி, 'காலம் கடத்தும் தந்திரம்' என்றும், தங்கள் தீர்மானப்படியே நடக்கவேண்டுமென்றும் ஒருசேரக் குரலெழுப்பி வற்புறுத்தினர், சென்னை நகர என். ஜி ஓ.-வினர்!

"கோரிக்கைகளை விட்டுக்கொடுப்பதற்கில்லை; இது எங்கள் எதிர்காலத்தைப் பற்றியது. இம்முறை வெற்றியெனில் எம்முறையும் வெற்றிதான்; இம்முறை தோல்வியெனில் எம்முறையும் தோல்விதான். சென்னை மாநில என். ஜி. ஓ.-க்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை இந்தியப் பிரதமரிடம் எடுத்துச் சொல்லுவோம்; நீதி வழங்குவதாக அவர் வாக்குறுதியளித்தால் மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வதில்லை.

"ஏற்கெனவே, அரசாங்க ஊழியர்களுக்குள்ள சில விதிகளை மீறி, சட்டசபை உறுப்பினர்களுக்குப் பகிரங்கக் கடிதம் அனுப்பியிருக்கிறோம்; இப்போது முதலமைச்சருக்குத் தூதுக் குழு அனுப்பப் போகிறோம். இச்செயல்கள் எல்லாம் இன்னலை விளைவிக்கக்கூடியவையே; அரசினர் நமது வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளாததால் வேறு வழியின்றி இப்படிச் செய்கிறோம். நமது வேண்டுகோள்களுக்கு அனுதாபம் காட்டினால் இப்போதுகூட அரசினர் நெருக்கடியைத் தவிர்க்கலாம்,"

என்று சேப்பாக்கத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில், என். ஜி ஓ. தோழர்கள் குரலெழுப்பியுள்ளனர்.

"ஜுலை முதல் நாளன்று சம்பளம் வாங்கிக்கொள்வதில்லை; பிறகு ஆகஸ்டில் ஒரு மணி நேர அடையாள வேலை நிறுத்தம்; அதன் பிறகு ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் செய்வது பற்றி ஜுலை 16-ந் தேதிக்குள் பொது வாக்கெடுப்பு நடத்த எண்ணியிருக்கிறோம்.

"பிரதமரை மட்டுமின்றி, மற்ற டில்லி அமைச்சர்களையும் சந்திப்போம்; அவர்களிடமிருந்து தெளிவான வாக்குறுதிபெற்றுக்கொண்டுதான் திரும்புவோம்; பிரதமர் நேரு நமது தூதுக் குழுவினரைச் சந்திக்க மறுத்தால், உறுதியாக அவருடைய அலுவலகத்தின் முன்பு அமர்ந்துகொண்டு மறியல் செய்வோம்.

"இந்த நிலையில் சங்க உறுப்பினர்கள் கடும் போராட்டத்திற்குத் தயாராக இருக்கவேண்டும். கிராக்கிப்படி கோரிக்கையில் வெற்றி பெறுவோமென்றோ, எப்போது திரும்புவோமென்றோ சொல்லுவதற்கில்லை; ஆனால் வாக்குறுதியளிக்கப்பட்டால், தீர்மானத்தின் இதர பகுதிகளை செயல்படுத்துவது நிறுத்தி வைக்கப்படும்.

"நிதிநிலைமை காரணமாக ஒன்றும் செய்யமுடியவில்லை—என்று அரசினர் சொல்லும் சமாதானத்தைக் கேட்டு அலுத்துவிட்டது" என்று தலைச்சேரியில் நடைபெற்ற தாலுகா என். ஜி ஓ-க்கள் மாநாட்டு விவரங்களை, மத்திய சங்கத் தலைவர் கண்ணன் குட்டி மேனன் கூறினார்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் அஞ்சலக சேவிங்ஸ் பாங்கிக் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை, 1951-ம் ஆண்டில் 40 90,020 ஆக இருந்தது—1955-ல் 28,84,147 ஆகப் பெருகிவிட்டது.

இலங்கை செய்திக்கு கிருபளானி மறுப்பு

நைனிடால், ஜுன் 12—

ம சோ. கட்சித் தலைவர் ஆச்சாரியா கிருபளானி, 'இலங்கையில் உள்ள தமிழர்கள், சிங்கள மொழிக்கும், தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து கொடுக்கவேண்டுமென்பதற்காகச் சத்தியாக்கிரகம் செய்தால் அவர்களுக்கு இந்தியர்கள் ஆதரவு காட்டக்கூடாது' என்று, சொன்னதாக இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக திரு. கிருபளானி வெளியிட்டுள்ள அறிக்கையில் தாம் இலங்கை மொழித் தகராறு குறித்து யாரிடமும் எதுவும் பேசவில்லை என்றும், தமக்கு இலங்கைப் பிரதம காரியதரிசியிடமிருந்து பத்திரிகைச் செய்தியில் கண்டவாறு நன்றியறிவிப்புத் தந்தி வரவே இல்லை என்றும், வேண்டுமென்றே இட்டுக்கட்டி இவ்வாறு பிரசுரிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

டில்லியில் ஒரு சிங்களப் பிரமுகர் சில நாட்களுக்கு முன்னர் தம்மைச் சந்தித்து இலங்கையில் மொழி நிலைமை குறித்துப் பேசினார் என்றும், அப்போது சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கையைப் பெரும்பான்மையினர் தீர்த்துவைக்க வேண்டுவது கடமை என்றும், சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிட்ட பிறகும் அவர்கள் சத்தியாக்கிரகம் செய்வார்களாயின் அவர்கள் அழிவுற நேரிடும் என்றும், மொழிப் பிரச்சினை குறித்துத் தாம் ஒன்றுமே கருத்துத் தெரிவிக்கவில்லை என்றும், அந்தச் சிங்களப் பிரமுகர் தம்முடைய விருப்பம்போல் தவறான செய்தி பிரசுரிப்பதற்குக் காரணமாயிருந்திருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்டாலின் மோட்டார்......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'ஸ்டாலின் மோட்டார் தொழிற்சாலை' என்ற பெயரையே மாற்றி, 'மாஸ்கோ மோட்டார் தொழிற்சாலை' என்று பெயர் வைத்திருந்தனர். அத்தொழிற்சாலையில் சிலநாட்களுக்கு முன்னர் தொங்கிக் கொண்டிருந்த ஸ்டாலினுடைய உருவப்படம் காணப்படவில்லை!

டிட்டோ பேசிய மேடையில் லெனினுடைய படம் மாத்திரமே தொங்கிக் கொண்டிருந்தது. டிட்டோவின் பேச்சு உள்பட அனைவருடைய பேச்சிலும் ஸ்டாலினுடைய பெயரே உச்சரிக்கப்படவில்லை!

இந்தியாவின் மொத்த வர்த்தகம், 1954-ம் ஆண்டில் ரூ. 1,179 கோடியாக இருந்தது;—1955-ம் ஆண்டில் ரூ. 1,248 கோடியாக உயர்ந்துவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.